**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC –33/2025**

**வழக்கு சாட்சி :PW1(LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாராயணன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | கடை |
| கிராமம் | : | பெருமாநாடு | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 42 |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜர்)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 22th day of May 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

நான் தற்போது பெருமாநாடு பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜெராக்ஸ் கடைட வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 07.02.2023 ம் தேதி வழக்கம் போல் எனது பணியை முடித்து விட்டு எனக்கு சந்தமான TN 55 BT 6570 என்ற ஆரஞ்சு கலர் ேஹாண்டா டியோ வாகன்ததை எனது வீட்டின் முன்பு நிருத்திவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது, காணவில்லை. பின்னர் இது சம்பநத்மாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அது **அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சிறிது நாட்கள் கழித்து எனது வண்டி கிடைத்து விட்டதாகவும், வந்து அடையாளம் காட்டும்படி போலீசார் சொன்னார்கள். நான் சென்று அடையாளம் காட்டினேன். பின்ன்ா நீதிமன்றத்தில் மனு செய்து எனது வாகனத்தை பெற்றுச் சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் என்னுடையது தான். அதை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். அந்த புகைப்படம் **அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகைப்பட்த்தில் உள்ள வாகனம் சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

**( சாட்சியானவர் அரசு வழக்கை பகுதி அளவு ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின்**

பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

கடந்த 02.03.2023 ம் தேதி நனும், எங்களது ஊரைச் சேர்ந்த செல்மணி மற்றும் செந்தில்குமார் ஆகியோருடன் காலை 10 மணி அளவில் புதுக்ோட்டை சென்றுக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி காணாமல் போன எனது இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று கொண்டிருந்ததாகவும், அவரை எனது வாகனத்துடன் பிடித்து விசாரித்து, கால் நிலையத்தில் ஒப்படைத்ததாக போலீசார் விசாரணை சொல்லிவிட்டு, தற்பொழுது எதிரியை காப்பாற்றுவதற்காக வழக்கு பற்றி எதுவும் தெரியது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.